## நாமக்கல், அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி முதல்வரின் செயல்முறைகள்
## முன்னிலை முனைவர் அ,இராஜா எம்.எஸ்ஸி.,பிஎச்.டி.,
## முதல்வர்

ந.க. எண்– 1653/ ஈ/ 2021 நாள்– 22.01.2024

பொருள்– தமிழ்நாடு அமைச்சுப்பணி – அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, நாமக்கல் – திருமதி அ.சிவசங்கரி, இளநிலை உதவியாளர்– கருணை அடிப்படையில் பணி நியமனம் – பணியினை வரன்முறைப்படுத்தும் பொருட்டு – ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை– 1. சென்னை– 6, கல்லூரி கல்வி இணை இயக்குநர் (திட்டம் மற்றும் வளர்ச்சி) அவர்களின் கடிதம் ந.க. எண்– 38325/பி1/2021, நாள்– 29.11.2021 மற்றும் இயக்கக தொலைபேசி வழி செய்தி நாள் – 30.01.2023.

2. இவ்வலுவலக இதே எண் கொண்ட 09.05.2022ம் மற்றும் 31.01.2023 நாளிட்ட கடிதம்.

3. சென்னை–15, கல்லூரி கல்வி இயக்குநர் (மு.கூ.பொ)அவர்களின் கடித ந.க.எண்1058/பி1/2023, நாள்– 06.12.2023.

4.தருமபுரி மண்டல இணை இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க. எண்– 7053/அ3/ 2023, நாள்– 07.12.2023

---

பார்வை (1) ல் காணும் இயக்குநர் அவர்களின் கடிதத்தின்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் பெற்று 15.02.2020 முற்பகல் முதல் திருச்சி மண்டல கல்லூரி கல்வி இணை இயக்ககத்தில் இளநிலை உதவியாளர் பணியில் பணியாற்றி விருப்ப இடப்பெயர்வின் மூலம் இட மாறுதல் பெற்று இக்கல்லூரியில் 26.07.2021 மு.ப. முதல் பணியாற்றிவரும் திருமதி அ.சிவசங்கரி என்பாரது பணியினை வரன்முறைப்படுத்தும்பொருட்டு கருத்துரு கோரப்பட்டதைத் தொடர்ந்து, இணைப்புகளில் கோரப்பட்ட விவரங்களை பார்வை 2ல் காணும் இவ்வலுவலக கடிதம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது.

பார்வை (3)ல் காணும் இயக்குநர் அவர்களின் கடிதத்தின்படி கருணை அடிப்படையில் நியமனம் பெற்ற பணியாளர்களது பணியினை பணிவரன்முறை செய்வதற்கு விதித்தளர்வு ஏதும் தேவைப்படாத நிலையில் பணிநியமன அலுவலரே பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் இக்கல்லூரியில் கருணை அடிப்படையில் பணியில் சேர்ந்து இளநிலை உதவியாளராகப் பணியாற்றிவரும் திருமதி அ.சிவசங்கரி என்பாருக்கு பணியில் சேர்ந்த நாளான 15.02.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

முதல்வர்
அறிஞர் அண்ணா
அரசு கலைக் கல்லூரி,
நாமக்கல்–637 002.
த.கு.எண்.CI-103

22/1/2024

பெறுநர்

திருமதி அ.சிவசங்கரி
இளநிலை உதவியாளர்
அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி
நாமக்கல் – 637 002

நகல்

1. கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை –15.
(தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது)
2 கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்,
தருமபுரி மண்டலம் தருமபுரி
(தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது)
3 பணிப்பதிவேடு
4 உபரி – 2